1981 மே 13]

திருப்பூர் சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் முதுகலை வரலாற்று வகுப்பினை ஏற்படுத்துதல்

*வினா எண். 1085—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருப்பூர் சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் முதுகலை வரலாற்று வகுப்பு வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியுள்ளார்களா ?

(ஆ) அப்படியென்றால் முதுகலை வரலாற்று வகுப்பு ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியினை ஆரம்பித்த காலத்திலே இருந்தே முதுகலை வகுப்பு வேண்டும் என்ற கோரிக்கை பலமாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இப்போது அப்படி ஏற்படுத்துகின்ற உத்தேசம் இருக்கின்றது என்று அமைச்சரவர்கள் சொல்லி இருப்பதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அது எப்போது துவக்கப்படும்? அதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து உடனடியாக அது அமைக்கப்படுமா?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அதற்கான அனுமதியைக் கேட்டு பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பப் பெற்றிருக்கிறது. அவர்கள் அங்குள்ள வசதி வாய்ப்புகளை ஆராய்ந்து, கொடுக்கிற முடிவுகளுக்குப் பிறகுதான் வகுப்புகள் ஆரம்பிக்கப் பெற வேண்டும். இந்த ஆண்டே வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில், அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இன்னொரு கோரிக்கையும் எழுப்பப் பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுதான் பி. எஸ். ஸி.—கெமிஸ்ட்டிரி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது: தற்போது ஜுவாலஜி வகுப்பு வேண்டும் என்று கோரிக்கைகளை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கான மனு கூட அரசுக்கு அனுப்பப் பெற்றிருக்கிறது. பல்கலைக் கழகத்திற்கும் மனு அனுப்பியிருக்கிறார்கள். ஜுவாலஜி வகுப்புக்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் அங்கே ஏற்கெனவே அமைத்து வைத்திருக்கிறார்கள். சோதனைக் கூடங்கள் கூட கல்லூரியின் சார்பிலே கட்டப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்த கோரிக்கையும் ஏற்று, அந்த வகுப்புகளையும் ஏற்படுத்தி தருவதற்கு அரசு ஆவன செய்யுமா? அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வகுப்புகளைத் துவக்குவது என்பது ஒவ்வொரு கல்லூரிக்கும் இருக்கும் வசதிகளை அடிப்படையாக வைத்து, ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு வகுப்பினைத் தொடங்குவதாக இருக்கிறோமே தவிர, ஒரே வருடத்தில் ஒரு கல்லூரிக்கே இரண்டு மூன்று வகுப்புகளைத் துவக்குவது சரியில்லை. அதுவும் திருப்பூர் போன்ற இடங்களில் துவக்குவது கடினமான காரியம், இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில். ஆகவே இரண்டில் ஏதாவதொன்றை, ஒன்று முதுநிலை வகுப்புகள் அல்லது ஜூவாலஜி பட்டப்படிப்பை துவங்குவதற்கு, அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவு

*வினா எண் 1086—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவிற்கு பதினைந்து காசு என்பதை உயர்த்த அரசிடம் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு உயர்த்தப்படும்?

(இ) எப்போது முதல் அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ). இல்லை. (ஆ). மற்றும் (இ):—இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு இப்பொழுது கொடுக்கக் கூடிய அந்த மதிய உணவிற்கான தொகை 15 காசு என்று சொல்லப்படுகிறது. அதுவும் இந்த ஆண்டிலிருந்துதான் நிர்ணயிக்கப்பட்டது என்பதை அறிவதோடு, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு அந்தந்த ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும் பணம் கொடுக்கப்படுவதாக தெரிகிறது. அதில் பல பஞ்சாயத்துக்களில் நிதி இல்லாத காரணத்தால், இந்தப் பணம் கொடுப்பது தாமதமாகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அதேபோல இன்றைக்கு இருக்கக் கூடிய விலைவாசிகளைக் கணக்கில் கொண்டு, ஒரு கத்தரிக்காய் வாங்கவேண்டுமானாலும் கூட 2 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது—ஆகவே இதைக் கணக்கில் கொண்டு, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கான தொகையை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்றும் அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1957 முதல் 30-9-1974 முடிய அரசு இந்தத் திட்டத்திற்காக கொடுக்கும் மானியம் 6 காசு, உள்ளாட்சி மன்றங்கள் கொடுக்கும் மானியம் 4 காசு, ஆக 10 காசாக